PDFaid.Com
#1 Pdf Solutions



# வரலாறு

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

- ஓர் அதிசயக் கண்டுபிடிப்பு! பலமில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தது டைனோசரஸ் என்ற பெரிய விலங்கு. அதன் முட்டைகள் அரியலூர் பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன
- நமக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை ஆதாரங்களுடன் தொகுத்துக் கால வரிசைப்படி கூறுவது வரலாறு ஆகும்.
- தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் நூறு ஆண்டுகளாக அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன.
- இதன் தொடர்ச்சியாக அண்மையில் கி.பி.2004இல் அகழ்வாராய்ச்சிப் பணியைத் தொடர்ந்தபோது ஒரே இடத்தில் 160க்கும் அதிகமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- மக்கள் வாழ்ந்த காலம், அக்கால நிகழ்வுகள், உணவுமுறை, பண்பாடு, பழக்க வழக்கம், ஆட்சிமறை, கலை, இலக்கியம் போன்றவற்றைப்பற்றி அறிய உதவும் எழுதப்பட்ட ஆதாரங்கள் மற்றும் பழங்காலப் பொருள்கள் முதலியன **வரலாற்று ஆதாரங்கள்** எனப்படும்.
- **வரலாற்றுக் காலம்,** வரலாற்றுக்கு முந்தையகாலம் என்று வரலாற்றினை இரு காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம்.
- அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்களும், பிற ஆதாரங்களும் கொண்ட காலத்தை **வரலாற்றுக்காலம்** என்கிறோம்.
- இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் போன்றவற்றை இத்தகைய **எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள்** எனலாம்.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிய உதவும் ஆதாரங்கள்

வரலாற்றுக்குமுந்தைய காலத்தைப்பற்றி அறிய அக்காலத்தைச் சார்ந்த பொருள்கள், சிதைவுகள், கற்கள், மரங்கள், விலங்குகளின் கொம்புகள், எலும்புகள், கற்கருவிகள், மண்டை ஓடுகள், படிமங்கள் போன்றவை உலகின் பல்வேறு பகுதிகளிலும்கிடைத்துள்ளன.

இந்தியாவிலும் பல்வேறு இடங்களில் சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு இந்தியாவின் தொல்பழங்காலத்தை அறிய முடிகிறது.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதை

1.பழைய கற்காலம் – (கி.மு.10000–ஆண்டுக்கு முன்)

2. புதிய கற்காலம் – (கி.மு.10000–கி.மு.4000)

அறிவுக்கடல் பதிப்பகம்

**3.**செம்புக் கற்காலம் – **(கி.மு.3000–கி.மு.1500)**

**4.** இரும்புக் காலம் – **(கி.மு.1500–கி.மு.600)**

- ஆதி மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளைக் கொண்டு கற்காலத்தைப் **பழைய கற்காலம், புதிய கற்காலம்** என இரண்டாகப் பிரிக்கலாம்.

**1. பழைய கற்காலம்**

- ஆதிமனிதன் சிக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தி **நெருப்பை** உண்டாக்கினான்.

ஒரு பொருள் குறித்த பல சொற்கள் முற்காலம், பழங்காலம், பண்டைக்காலம், தொன்மைக் காலம், ஆணிகாலம், தொல்பழங்காலம்.

முக்கியத் தோற்றங்களின் ஆண்டுகள்

- பூமியின் தோற்றம் – 460 கோடி ஆண்டுகளுக்கு முன்
- மனிதனின் தோற்றம் – 40000 ஆண்டுகளுக்கு முன் (ஹோமோ செப்பியன்ஸ்)
- வேளாண்மை தோன்றிய காலம் – சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்
- நகரங்களின் தோற்றம் – 4700 ஆண்டுகளுக்கு முன்

அறிவுக்கடல் பதிப்பகம்

கி.மு.–கிறிஸ்து பிறப்பதற்கு முன்

**(BC – Before Christ)**

கி.பி. – கிறிஸ்து பிறந்தபின்

(AD –Anno Domini)

CE – Common Era

BCE – Before Common Era

திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு.31

தி.மு. திருவள்ளுவருக்கு முன்

(B.TBefore Thiruvalluvar)

தி.பி – திருவள்ளுவருக்குப் பின்

A.T – After Thiruvalluvar)

மடியில் குழந்தையைக் கட்டிக்கொண்டு ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப் பிரதேசத்திலுள்ள **பிம்பேட்கா** குகையில் உள்ளது.

**இந்தியாவில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள்**

- மத்திய பிரதேசம் –சோன் ஆற்றுப்படுகை, பிம்பேட்கா, ம்ஹேஸ்வா.
- ராஜஸ்தான்–லூனி ஆற்றுச் சமவெளி,
- கர்நாடகம்–பாகல்கோட்.
- ஆந்திரப்பிரதேசம் –கர்னூல் குகைகள், ரேணிகுண்டா.
- தமிழ்நாடு – வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்.

**2. புதிய கற்காலம்**

மனிதன் முதலில் பழக்கிய விலங்கு நாய். இது வேட்டையின்போது உடன் சென்று உதவியது. ஆடு, மாடுகளை மேய்த்து பால், இறைச்சி முதலியவற்றை உணவாகக் கொண்டான். மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த படிநிலையைப் புதிய கற்காலம் எனலாம்.

அறிவுக்கடல் பதிப்பகம்

- அக்காலத்தின் முக்கிய மாற்றம் உணவு உற்பத்தி ஆகும். அக்காலத்தில்தான் சக்கரமும் உருவாக்கப்பட்டது.

- மேலும் சக்கரத்தைப் பயன்படுத்தி மண்பாண்டங்கள் செய்தான்.

- முதலியவற்றால் கைப்பிடிகள் பொருத்தினான்

- மண் குடிசைகளை அமைத்தான், மனிதன் குடியிருப்புகளை உருவாக்கிக் கூட்டமாக வாழ்ந்தான்.

- குடிசைகள், வட்டம் அல்லது நீள் வட்டவடிவமானவை. இவை தரை மட்டத்திற்குக்கீழ், பள்ளமாக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டன. கூரைகளும் வேயப்பட்டன.
- பயிர்த்தொழில் செய்தனர்.

- விலங்குகளைப் பழக்கி வளர்த்தான், மேய்ச்சல் தொழில் செய்தான்.

- கோடாரி, எலும்புக் கைப்பிடிகள், தூண்டில் முள், ஊசிகள், வெட்டுக் கருவிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன.

- புதிய கற்காலத்தில, இறந்தோரைப் புதைக்கும் பழக்கம் இருந்தது. அவ்வாறு புதைக்கும்போது, அவர்களுடன் பழகிய விலங்குகளையும் சேர்த்து, வீட்டின் முற்றத்திலேயே புதைத்தனர்.

**புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ள இடங்கள்:**

திருநெல்வேலி, தான்றிக்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம்.

**3. செம்புக் கற்காலம்**
**(செம்புக் கற்காலக் கருவிகள்)**

- புதிய கற்கால முடிவில் செம்பு என்னும் உலோகத்தின் பயனை அறிந்தனர், செம்பினால் கருவிகள் செய்தனர். ஆத்துடன் சிறு கற்கருவிகளையும் பயன்படுத்தினர். ஏனவே, அக்காலம் செம்புக் கற்கருவிகள் காலம் என்று குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்களின்மேல் வண்ண ஓவியங்கள் வரைந்தனர்.

அறிவுக்கடல் பதிப்பகம்

- இவை வரிக்கோலங்களாக அமைத்து இருந்தன. ஹரப்பா நகர நாகரிகம் இக்காலத்தைச் சேர்ந்தது.

**இரும்புக் காலம்**

- இரும்பினால் கருவிகள் செய்த காலம் இரும்புக்காலம் எனப்படும். இக்காலத்தில் வீட்டுச்சாமான்களும், பயிர்த்தொழில் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன. உலோகத்தை உருக்கிக் கருவிகள் செய்ய அறிந்திருந்தனர். அவர்களிடம் கற்பனைத்திறன் காணப்பட்டது. வேதகால நாகரிகம் இரும்புக்காலத்தைச் சார்ந்தது.

**உலோகக் கலவைகள்**

- இரும்பு+குரோமியம் = சில்வர்
- செம்பு+ வெள்ளீயம் = வெண்கலம்
- செம்பு + துத்தநாகம் = பித்தளை
- இரும்பு + மாங்கனீசு = எஃகு

**6.சிந்துவெளி நாகரிகம்**

- மனிதனுக்கு முதன்முதலில் தெரிந்த உலோகம் **செம்பு (தாமிரம்).** அதனால் அவன் செம்பு, கல் இரண்டையும் பயன்படுத்தினான். அக்காலமே **செம்புக் கற்காலம்** எனப்படுகிறது.

- இந்தியாவில் மிகத்தொன்மை வாய்ந்த நகர நாகரிகமான சிந்துவெளி (ஹரப்பா) நாகரிகம் செழித்திருந்தது.

**ஹரப்பா**

- ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது 1856 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் சிந்து நதியின் கிளை நதியான ராவி நதிக்கரையில் இருப்புப்பாதை அமைத்தனர்.

- 1921இல் அகழ்வு ஆராய்ச்சி செய்து தொன்மை இந்தியாவின் முதுபெரும் நகரம் அது என்பதைக் கண்டறிந்தனர்.

- ஹரப்பா என்ற சிந்தி மொழிச் சொல்லுக்குப் புதையுண்ட நகரம் என்பதை பொருள்.

- சுமார் 4,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாகரிகம் இந்தியாவில் மலர்ந்து இருந்ததாகக் கண்டறியப்பட்டது. இதைப் போன்ற நகரங்களின் இடிபாடுகள், மொகஞ்சதாரோ, சான்குதாரோ, கலிபங்கன், லோத்தல் போன்ற வேறுபல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன

அறிவுக்கடல் பதிப்பகம்

# அறிவுக்கடல் பதிப்பகம்

**மனை எண் : 3262,**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு**

**மதுரை – 625 011.**

**தொலைபேசி :** 0452-6463666 **செல் :** 98426 49140, 98421 88660

E-mail : akpmadurai@gmail.com Website : www.arivukadal.com


| வ.எண் | புத்தகத்தின் பெயர் | விலை (ரூ) |
|---|---|---|
| 1. | TNPSC Group II பொது அறிவியலும் பொதுத்தமிழும் **(New Edition)** | 400 |
| 2. | TNPSC Group II Self Test (5 மாதிரி வினாத்தாள்) **(New Edition)** | 100 |
| 3. | GK 17,000 வினா-விடைகள் | 300 |
| 4. | GK 1,000 வினா-விடைகள் | 29 |
| 5. | இயர்புக் 2012 | 100 |
| 6. | இயர்புக் 2013 | 150 |
| 7. | தமிழக வரலாறு, இந்திய வரலாறு | 180 |
| 8. | புவியியல் 3000 வினா-விடைகள் (Group-II) | 110 |
| 9. | இந்திய தேசிய இயக்கம், இந்திய அரசியலமைப்பு, இந்திய பொருளாதாரம் | 160 |
| 10. | பொதுத்தமிழ் (TNPSC) | 120 |
| 11. | பொது அறிவு (TNPSC) | 130 |
| 12. | Current Affairs English Medium | 65 |
| 13. | GK சக்சஸ் மாத இதழ் | 30 |
| 14. | தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும் | 200 |
| 15. | நடப்பு நிகழ்வுகள் 2013 சனவரி முதல் ஆகஸ்ட் வரை | 100 |
| 16. | மனத்திறன் தேர்வு | 110 |
| 17. | (Group-II) முந்தைய ஆண்டுகளின் வினா-விடை (7 ஆண்டுகள்) | 130 |
| 18. | தமிழ் இலக்கிய வரலாறு | 160 |
| 19. | பொதுத்தமிழ் (15 மாதிரி வினா-விடை) | 90 |

## ஆசிரியர் தகுதித் தேர்வு

| வ.எண் | புத்தகத்தின் பெயர் | விலை (ரூ) |
|---|---|---|
| 1. | 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வினா-விடைகள் | 160 |
| 2. | TET முதல் தாள் (1056) பக்கம் | 400 |

அறிவுக்கடல் பதிப்பகம்



www.kalvikural.com

| | | |
|---|---|---|
| 3. | TET தமிழ், ஆங்கிலம், குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறைகள் | 180 |
| 4. | TET கணிதம் | 150 |
| 5. | TET அறிவியல் | 130 |
| 6. | TET வரலாறு | 110 |
| 7. | TET குடிமையியல், புவியியல், பொருளாதாரம் | 160 |
| 8. | TET SELF TEST PAPER மாதிரி தேர்வு | 65 |
| 9. | தமிழ்க் களஞ்சியம் 10,000 வினா-விடைகள் | 300 |
| 10. | கல்வியியல் 4,500 வினா-விடைகள் | 150 |
| 11. | TRB இயற்பியல் 2,200 வினா-விடைகள் | 150 |
| 12. | TRB ஆங்கிலம் 4500 | 130 |
| 13. | TRB தமிழக வரலாறு, இந்திய வரலாறு 6,100 வினா-விடைகள் | 180 |
| 14. | +2 கணிப்பொறியியல் | 60 |
| 15. | +2 வணிகவியல் | 48 |
| 16. | +2 கணக்குப்பதிவியல் | 48 |
| 17. | அலக்கண் கவிதை | 70 |
| 18. | நோக்கால் – கவிதை | 50 |
| 19. | அரவாணிப்பூக்கள் | 70 |

**TET PAPER II (6 TO 12) – NEW EDITION**

| S.No | Name of the book | Price (Rs.) |
|---|---|---|
| 1. | தமிழ் | 300 |
| 2. | ஆங்கிலம் | 250 |
| 3. | குழந்தைகள் மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறைகள் | 150 |
| 4. | சமூக அறிவியல் | 400 |
| 5. | அறிவியல் | 600 |
| 6. | கணிதம் | 420 |
| 7. | TNPSC பொதுத்தமிழ் “ஆ” “இ” | 130 |
| 8. | இயர்புக் – 2014 | 150 |
| 9. | VAO 25/25 | 99 |
| 10. | VAO TNPSC | 500 |

பணம் செலுத்தும் முறை

கரூர் வைஸ்யா பேங்க் A/C/No: 1161135000002562
தெற்குமாசி வீதி (கிளை), மதுரை
IFSC Code No : KVBL0001161

அறிவுக்கடல் பதிப்பகம்



www.kalvikural.com

- சுட்ட செங்கற்களால் நீர் கசியாமல் இருக்குமாறு இணைத்துக் கட்டப்பட்டிருப்பது மிகவும் வியப்பை உண்டாக்குகிறது.

**மொகஞ்சதாரோ என்ற சிந்தி மொழிச் சொல்லுக்கு இடுகாட்டுமேடு என்பது பொருள்.**

பயன்பாட்டு அறிவியல்

கட்டடத் தொழில், நிலம் தேறுதல், மனை அளவீடு, கால்கோளுதல், தரமான கட்டுமானப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தல், வடிவக்கணித அமைப்புப் பற்றி அறிதல் முதலிய பயன்பாட்டு அறிவியல் தொழில் நுட்பங்கள் நடைமுறையில் இருந்தன.

தமிழ்நாட்டில் காணப்படும் கோவில் குளங்களுக்கும் சிந்துவெளி நகரங்களில் காணப்பட்ட பெருங்குளத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக. அக்குளங்களில் நன்னீரைநிரப்ப எவ்வகையான நீர்மேலேற்றும் சாதனம் பயன்பட்டிருக்கும் ?

- குழந்தைகள் விளையாடும் சுடுமண் பொம்மைகளும், கிளிஞ்சல், பித்தளை, செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவற்றால் செய்யப்பட்ட பல விளையாட்டுப் பொருள்களும் இங்கு காணப்படுகின்றன.

- ஆயுதங்கள், வீட்டுச்சாமான்கள், கருவிகள் முதலியவற்றைச் செய்யச் செம்பையும் வெண்கலத்தையும் பயன்படுத்தினார். தங்கமும் வெள்ளியும் அணிகலன்கள் செய்யப் பயன்பட்டன. எடைக்கற்கள் ஒருவகைத் திண்மையான கற்களால் தயாரிக்கப்பட்டிருந்தன.

**சுடுமண் முத்திரைகள்**

செவ்வக வடிவிலான நூற்றுக்கணக்கான முத்திரைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சித்திர வடிவிலான எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்களை இதுவரை இனங்காண இயலவில்லை. களிமண் முத்திரைகளில் காளைகள், வண்டி, புறா, படகுகள் யோகமுத்திரையில் அமர்ந்துள்ள ஒருவரின் வடிவம், சுடுமண் உருவப் பொம்மைகள் முதலியன காணப்படுகின்றன.

**எழுத்துமுறை**

- இங்கு கண்டெடுக்கப்பட்ட சுட்ட களிமண் பலகைகளின் மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சித்திர எழுத்துகளாகும்.

அறிவுக்கடல் பதிப்பகம்

- ஏடுகளில் வரிகள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகவும் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன.

**கலைகள்**

சிந்துவெளி மக்கள் டெர்ராகோட்டா எனப்படும் சுடுமண் பாண்டம் செய்வதில் திறமை மிக்கவர்களாக இருந்தனர். பறவைகள், விலங்குகள், ஆண், பெண் உருவங்கள், குவளைகள் போன்ற பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**சிற்பம்**

- மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச்சிலை.
- தாடியுடன் காட்சிதரும் ஒருவரின் சுண்ணாம்புக்கல் சிலை முதலியன, அக்கால மக்களின் சிற்ப வேலைத்திறனுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

**சமயம்**

- மொகஞ்சதாரோவில் கண்டு எடுக்கப்பட்ட பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயக் கோட்பாடுகளையும் சமயப்பற்றினையும் அறிவிக்கின்றன. பசுபதி என்ற சிவனையும், பெண் கடவுளையும், லிங்கம், சூலம், மரம் முதலியவற்றையும் வணங்கினர்.

- இறந்தவர்களைப் புதைக்கும்போது அச்சடலங்களுடன் உணவு, அணிகலன்களையும் சேர்த்துத் தாழிகளிலிட்டுப் புதைத்தனர்.

**பண்டையத் தமிழகம்**

இந்தத் தென்னாட்டில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் மாநிலங்கள் உள்ளன.

**"வடவேங்கடம் தென்குமாரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்"**

- என்ற நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

- ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும்பகுதி சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டது.

- நாடு சுதந்திரம் பெற்றவின் தமிழ்மொழி பேசப்படும் மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அதற்கு 1967ஆம் ஆண்டில் முதலமைச்சராக அமர்ந்த அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

- "செந்தமிழ் நாடெனும் போதினிலே–இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே–எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே–ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"
என்று தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார்.

அறிவுக்கடல் பதிப்பகம்

- நமது தமிழ்நாடு, மூவேந்தர் எனப்பட்ட சேர, சோழ, பாண்டியர் மரபுவழியினரான மாமன்னர்களால், பண்டைக்காலம் முதல் ஆளப்பட்டு வந்தது. தென்னாட்டின் தென் பகுதியைப் பாண்டியர்களும், மேற்குப் பகுதியைச் சேரர்களும், வடகிழக்குப் பகுதியைச் சோழர்களும் ஆண்டு வந்துள்ளனர்.

**வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்:**

- தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப் பரப்பில், பஃறுளியாறு ஓடியது, பன்மலை அடுக்கம் நீண்டிருந்தது. மழைவளம் பெருகி, பெருங்காடுகள் வளர்ந்து, மக்களின் நாகரிகமும் சிறந்து நல்லதோர் அரசும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பர். அதுவே பண்டை அரசான பாண்டியர் அரசு ஆக இருத்தல் கூடும்.

**மூன்று சங்கங்கள்:**

- அக்காலத்தில் பாண்டியர் தலைநகர் 'தென்மதுரை', அங்குத் தமிழ் வளர்த்த தலைச்சங்கம் கூடியது என்று கூறப்படுகிறது. பின்னர் நிகழ்ந்த கடற்கோளால், தென்மதுரை உள்ளிட்ட பெருநிலப்பகுதி கடலில் மூழ்கியதால், நீரில் மூழ்காத நிலப்பரப்பில் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசு நடைபெற்றது.

- மதுரை மூதூரில் தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச்சங்கம் நடைபெற்றது. இங்குப் பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆய்வு நடத்திய சிறப்பால், இந்நகரே 'கூடல்' என்றும் பெயர் பெறுவதாயிற்று.

**லெமூரியாக் கண்டம்:**

- கடற்கோளால் மூழ்கிப்போன குமரிக் கண்டத்தில்தான், பல்லுயிர்களும் பெருகுதற்கேற்ற தட்பவெப்பச் சூழல் நிலவியது. அதனால் பரிணாம வளர்ச்சி முறையில், மங்குதான் முதல் மனித இனம் தோன்றியிருக்க வேண்டும், அந்த மாந்தர் பேசிய முதல் மொழியே, தமிழின் மூலமொழி ஆகும்.

- 'லெமூர்' என்னும் குரங்கினத்தின் பெயரால் அக்கண்டம் "லெமூரியா" என்று பெயர் பெற்றது என்றும், அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே முதல் மனிதன் பிறக்கக் காரணம் என்றும் கருதுகின்ற ஆய்வாளரும் உள்ளனர்.

**<u>வரலாற்றுக் காலம்:</u>**

- சங்க காலத்தில் தொடங்குகிறது. சங்க காலம் என்பது கடைச்சங்கத்தில் புலவர்கள் அவ்வப்போது கூடித் தமிழ் ஆய்வு செய்த காலமாகும். அது தி.மு. ஆன்டுக் காலமாகும். அது தி.மு.300 முதல் தி.பி.300 வரை என்று கொள்வோரும் உண்டு.

- **<u>குறிப்பு:</u>** தி.மு–தி.பி. என்பது திருவள்ளுவரின் பிறப்பாண்டான கி.மு.31 ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு கணக்கிடுவதாகும். தமிழறிஞர்களின் முடிவின்படி, கிறித்து

அறிவுக்கடல் பதிப்பகம்

# அறிவுக்கடல் பதிப்பகம்

**புத்தகம் கிடைக்கும் இடங்கள்**

| வ.எண் | பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1. | சென்னை | 9094826254 |
| 2. | மதுரை | 9750216789 |
| 3. | கோவை | 9994343334 |
| 4. | சேலம் | 9842428861 |
| 5. | தூத்துக்குடி | 9443833333 |
| 6. | திருநெல்வேலி | 9750216789 |
| 7. | கன்னியாகுமரி | 9894846425 |
| 8. | திருவண்ணாமலை | 9994063702 |
| 9. | நாமக்கல் | 9894217248 |
| 10. | திருச்சி | 9944144222 |
| 11. | பெரம்பலூர் | 9894495845 |
| 12. | அரியலூர் | 9843427724 |
| 13. | புதுக்கோட்டை | 9659765900 |
| 14. | சிவகங்கை | 9994079013 |
| 15. | இராமநாதபுரம் | 9842537005 |
| 16. | தேனி | 9443929273 |
| 17. | ஈரோடு | 9443182330 |
| 18. | தர்மபுரி | 9486015051 |
| 19. | கிருஷ்ணகிரி | 9443234210 |
| 20. | விழுப்புரம் | 9943153202 |
| 21. | காஞ்சிபுரம் | 9842316661 |
| 22. | தஞ்சாவூர் | 9486525806 |
| 23. | நாகப்பட்டினம் | 9500478338 |
| 24. | வேலூர் | 9791544734 |
| 25. | திண்டுக்கல் | 9500862024 |
| 26. | விருதுநகர் | 9042482982 |
| 27. | திருவாரூர் | 9443491894 |
| 28. | திருத்தணி | 9750216789 |
| 29. | கரூர் | 9750216789 |
| 30. | கடலூர் | 9443079942 |
| 31. | செஞ்சி (இந்தியன் புக்ஷாப்) | 9087976363 |

அறிவுக்கடல் பதிப்பகம்

பிறப்பதற்கு **31** ஆண்டுகள் முன்னர் திருவள்ளுவர் பிறந்தார் என்று கொண்டு, காலத்தைக் கணக்கிடுவதைத் தமிழக அரசும் ஏற்று அறிவித்துள்ளது.

- தற்காலத்தில் சங்க இலக்கியம் எனக் கிடைத்துள்ள நூல்கள் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். அவற்றிலுள்ள செய்யுட்களைக் கபிலர், பரணர், ஔவையார், நக்கீரர் முதலான் பல்நூறு புலவர்கள் இயற்றியுள்ளனர்.

- கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தமிழின் பெருமைக்கு அடையாளமாக அரும்பெரும் இலக்கணமான தொல்காப்பியம் தோன்றியுள்ளது.

- சங்க காலத்திலேயே அனைத்துச் சமயத்தாரும் வியந்து போற்றும் திருக்குறள் தோன்றி இருக்கிறது என்பது தமிழுக்குத் தனிப் பெருமையாகும். ஆதனால்தான் தேசியகவி பாரதியார்,

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்**
**கொண்ட தமிழ்நாடு" என்று முழங்கியுள்ளார்.**

- நமது தாய்மொழி தமிழ் இலக்கண வரம்பு கொண்டு வளர்ந்த தன்மையால், 'செந்தமிழ்' என்றும் வழங்கப்பட்டது. பிற மொழிகளின் துணை தேவையின்றியே 'தமிழ்' வளரும் திறன் பெற்றிருப்பதால் தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

- நாவாய், கலம், கப்பல், தோணி, ஓடம், படகு, தெப்பம், கட்டுமரம் முதலான ஏராளமான சொற்கள் கடலில் செல்லும் கலங்களைச் சுட்டும் பெயராக உள்ளது.

- அக்காலத்தில் 'புகார்' என்னும் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி, வஞ்சி முதலான பல துறைமுகங்கள் இருந்தன. மேற்கிலும், கிழக்கிலுமிருந்த எகிப்து, யவனம், ரோம், சீனம் முதலான பல நாடுகளுடன் பண்டமாற்று வணிகம் செய்துவந்தது தமிழ்நாடு.

- வடபுலத்தில் சிந்துவெளியில் அகழ்ந்து காணப்பட்ட மொகன்–சா–தாரோ, ஹரப்பா முதலான (பழைய) நகர நாகரிகச் சின்னங்களாகக் கண்டெடுக்கப்பட்டன.

- மலைகளும் அது சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது.

- காடுகளும் அது சார்ந்த நிலமும் முல்லை எனவும்,,

- கடலும் கடற்கரைப் பகுதியும் நெய்தல் எனப்பட்டது.

- நீர்வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி மருதம் எனப்பட்டது.

- கடும் வறட்சிக்கு உள்ளாகித் திரிந்த நிலத்தைப் பாலை என வழங்கினர்.

அறிவுக் கடல் பதிப்பகம்

- உழவுத் தொழில், உலகோர்க்கு உணவளிக்கும் உயர்ந்த தொழிலாக மதிக்கப்பட்டது.
- குறுநில மன்னராக விளங்கிய எழுவர், கடையெழுவள்ளல்கள் எனப்பட்டனர். பாரி, ஓரி, காரி, நள்ளி, எழினி, பேகன், ஆய் ஆகியோர் அத்தகு புகழ்வாய்ந்தவர்களாவர்.
- திருக்கோவில்கள் கட்டும் முறை வளராத அக்காலத்தில், சங்ககால மக்கள் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நடுகல்லையும் தமது முன்னோர்களையுமே வழிபட்டு வந்தனர்.
- அறுவடை விழா, பொங்கல் விழா, இளவேனில் பருவவிழா போன்ற விழாக்களை மக்கள் கொண்டாடினர். தலைநகர்களில் இந்திர விழாவும் கொண்டாடப்பட்டது.

## வேதகாலம்
## ஆரியர்கள்

- ஆரியர்கள் மத்திய ஆசியப் பகுதியிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் குடியேறியவர்கள்.
- இந்தியாவில் அவர்கள் குடியேறிய பகுதி ஆரிய வர்த்தம் எனப்பட்டது.
- வேதகாலம் முற்பட்ட வேதகாலம், பிற்பட்ட வேதகாலம் எனப் பிரித்து அறியப்படுகிறது.
- முற்பட்ட வேதகாலம் அல்லது ரிக் வேதகாலம் (கி.மு.1500–கி.மு.1000)

ரிக்வேதம் தொகுத்த காலத்தில் ஆரியர்கள் பெரும்பாலும், இன்றைய பாகிஸ்தானில் உள்ள சிந்துப் பகுதியிலேயே வாழ்ந்தனர். அவர்கள் முதலில் பஞ்சாபில் இருந்த சப்தசிந்து எனப்பட்ட (ஏழு நதிகள் பாயும் நிலம்) பகுதியில் குடியேறினர். ரிக்வேதத்தின் வாயிலாக வேதகால மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை அறிய முடிகின்றது.

அறிவுக்கடல் பதிப்பகம்

**அறிவுக்கடல் பதிப்பகம்,**

மனை எண் : 3262,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு,
வில்லாபுரம், மதுரை – 625011
website : www.arivukadal.com email:akpmadurai@gmail.com
Phone : 98651 30130, 98426 49140